ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 5 } துந்துபி௵ மார்கழி௴ 1922௵ டிசம்பர்௴ { சஞ்சிகை. 9

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பழவினைப்பயன் இத்தகைத் தென்பது.

"ஆடகச் செம்பொற் கிண்ணத் தேந்திய வலங்கற் றெண்ணீர்
கூடகங் கொண்ட வாழ்நா ளுலந்தபிற் கொல்லும் பவ்வத்
தூடகம் புக்கு முந்நீ ரழுந்தினு முய்வர் நல்லார்
பாடகம் போலச் சூழ்ந்த பழவினைப் பயத்தி னென்றான்."

(இ-ள்.) "ஒருவனுக்கு உடம்பினிடத்தே கொண்ட வாழ்நாள் கெட்டு முடிந்ததானால், அவனுடைய மனைவி முதலியோர் அவனுட் கொள்ளும் பொருட்டு, ஆடகமென்னும் முதற்சாதிச் செம்பொன்னாற் செய்யப்பட்ட கிண்ணத்தில் எந்திய அசைகின்ற தெளிந்த நீரும் அவனைக்கொன்றுவிடும்; மாதர்களின் பாடகமென்னும் காலணிபோலச் சூழ்ந்த பழய நல்வினையின் பயனாலே, மனிதர் சமுத்திரத்தி னடுவிடத்தில் புகுந்து மூவ்வகை நீராகியசமுத்திர ஜலத்தினுள் மூழ்கினாலும் பிழைப்பர் என்று கூறினான் ஸ்ரீதத்தனென்பான்" என்பதாம்.

(வி-ரை.) மனிதனுக்கு வாழ்நாள் முடிந்துவிட்டதானால், அவனுடைய மனைவி, அவன் பருகும் பொருட்டுப் பொற்கிண்ணத்தில் ஏந்திக் கொடுத்த தண்ணீரை, அவன் பருகுங்கால் அது தொண்டையில் விக்கிக்கொண்டு அவனைக் கொன்றுவிடும். மனிதர்க்குப் பழவினை நல்லதாயிருக்குமானால், அவர் சமுத்திர நடுவில் வீழ்ந்துமூழ்கினும் ஏதேனுமோ ரேதுவினால் பிழைத்துக் கொள்வார்கள். இதனால் மனிதர்க்கு வாழ்வுங் கேடும் பழவினைப்பயனால் நேருமென்பதும், அதனால் அறிஞர் வாழ்விற்கு மகிழ்தலும், கேட்டிற்கிரங்கலும் செய்யாரென்பதும் பெறப்படும். ஆடகம்-நால்வகைப் பொன்களுள் முதன்மை பெற்றதொன்று; துவரம்பருப்பைப்போன்ற மஞ்சள் நிறம்பெற்றது; ஆடகம்-துவரை. நால்வகைப் பொன்களாவன:—ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்பனவாம்; இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம் பெற்றவை. ஆடகப்பொன்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அலங்கல்-அலைசதல். உலத்தல்-கெடுதல். முந்நீர்-மூன்றுவகை நீர்; சமுத்திர ஜலம் ஆற்று நீர், வேற்று நீர், ஊற்று நீர் என்னும் மூன்றும் விரவப்பெற்றதாதலின், அதற்கு முந்நீர் என்னும் பெயர் அமைந்தது. பாடகம்-ஒருகம்பியால் போக்கும் வரவுமான பல முடக்காயமைந்து, காலைவிடாமற் பற்றிக்கிடப்பது. பழவினையொன்றே நல்வினை தீவினையென இரண்டாய் மனிதனைச் சூழ்ந்துகிடத்தலால் இதற்குப் பாடகம் உவமை கூறப்பட்டது. இனி, 'நல்லார் பாடகம் போலச் சூழ்ந்த' என்பதற்கு, 'மகளிர் பக்கத்தேபற்றிய ஆடவர் மனம்போலச் சூழ்ந்த' எனவும் பொருளுரைக்கலாம்; பாடு-பக்கம், அகம்-மனம். 'நல்லார்' என்பதை, 'நல்லவர்கள்' எனக்கொண்டு, 'உய்வர்' என்பதற்கெழுவாயாக்கினும் அமையும்; அங்ஙனங் கொள்ளுமிடத்து, 'பழவினைப்பயத்தின் முந்நீரழுந்தினும் நல்லார் உய்வர்' எனக் கூட்டிமுடித்தல் வேண்டும். (சீவகசிந்தாமணி 510)

தருமசீலன்.

துந்துபி௵ மார்கழி௴.

"கேட்டிலுறுதி கூட்ட முடைமை."

இதன்பொருள்:—"கேட்டில் - நட்பாளன் கேடுறுங்காலத்தில், உறுதி-(அகலாது நின்று அவனுக்குத் துணைசெய்து) திடமாய் நிற்பதே, கூட்டமுடைமை-ஒருவனுடைய நட்புடைமையாகும்," என்பதாம்.

ஒருவர் செல்வத்துடன் இருக்குங்காலத்தில் அவருடன் நெருங்கியிருந்து பல இன்பங்களை யனுபவித்து அவர்க்குக் கேடுவரும்போது நீங்கிவிடுவது சிநேகமாகாது. நண்பனுக்குக் கேடுவந்த காலத்திலும் அவனைவிட் டகலாதிருந்து அவனுக்குதவிபுரிந்து மனத்தளர்ச்சியை நீக்குவதே நட்புடைமையிற் சிறந்ததாம். உலகத்தில் ஒருவருடன் ஒருவர் சிநேகஞ் செய்துகொள்வது, துன்பமுற்ற காலத்தில் ஒருவர்க்கொருவர் ஊன்று கோல்போல நின்று உதவுதற்கேயாம். அவ்வுதவியின்றேல் அச் சிநேகத்தால் எவ்வகைப் பயனுமின்றாம். சிலர், சுயநலங் கருதித் தனவந்தரோடு உயிர்த்தோழர் போன்று நடித்திருந்து அவருடைய இன்பங்களையெல்லாம் தம்முடையனவென்றே சொந்தம் பாராட்டி அனுபவித்து அவர்க்குக் கேடுவந்த காலத்தில் அயலார் போன்று ஒருதவியும் செய்யாமல் ஒதுங்கிச் செல்வர். இவர் வஞ்சகரேயன்றி உண்மைச் சிநேகராகார். இவர்க்குத் துர்க்கதியே கிடைக்கும். சிலர், நண்பருக்கு எக்காலத்தும் உடனின்றுதவுவர். இவரே உண்மைச் சிநேகராவர். இவர்க்கு நற்கதியே கிடைக்கும். இங்ஙனம் அமைந்த உண்மைச் சிநேகரையும், போலிச் சிநேகரையும், ஒருவர், தமக்குக் கேடுவந்த காலத்தில் அவர்கள் உடனின்றுதவி உறுதி காட்டுவதாலும், உதவாமல் அகலுவதாலும் உணர்ந்துகொள்ளலாம். இந்நீதியால், ஒருவர்க்குக் கேடுவந்த காலத்திலும் உதவி புரிவோரே சிநேகராவரென்

பதும், அங்ஙனமல்லாதார் நட்பினராகாரென்பதும், ஒருவரோடு ஒருவர் சிநேகித்தால் அவர்க்குக் கேடுவந்த காலத்தில் அவர் உதவி புரிதலே நட்பின் பயனுமென்பதும் உணரப்படும். ஆதலின், ஒவ்வொருவரும் உறுதி யுள்ளாரோடு சிநேகிப்பாராக.

(திருவருட்சகாயம்.)

"க்ஷத்ர சூடாமணி."

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-8, பக்கம்-174)

(கேமசரியாரிலம்பகம்.)

அப்பால் 'ஜீவகன்' பல நதிகளையும் புண்ணிய க்ஷேத்திரங்களையும் அடைந்து பூஜித்துவிட்டு, முடிவில் "சித்திரகூட" த்தி லுள்ள தவசிகளின் ஆச்சிரமத்துப் போய்ச் சேர்ந்தான். அங்கிருந்த முனிவர்கள் அவனை வரவேற்றுக் கந்த மூலபலாதிகளால் உபசரித்தனர். அவன் அவ்விடம் முனிவர்கள் தவறுதலாகத் தவஞ் செய்வதைக் கண்டு வருந்தினான். பிறருக்கு நன்மை செய்பவர்கள் சகலப் பிராணிகளிடத்திலும் காரணமின்றியே கருணைகொள்வார்களன்றோ? தத்துவஞானிகள் தத்துவஞான மற்றவர்களிடமும் தயை வைப்பார்கள்; கிணற்றில் விழப்போகும் பாலனைக் கவனியாதிருப்பவரும் உண்டோ? தத்துவங்களை யுணர்ந்த ஜீவகன் தவசிகளைப் பார்த்து அன்புடன் தத்துவத்தைப் போதிக்கலானான்:

"ஹே தவசிகளே! எந்தப் பிராணியையும் வருத்தக் கூடாது; 'நஹிம்ஸ்யாத்ஸர்வாபூதாநி' என்று வேதவாக்கியமே சொல்லும்பொழுது, ஹிம்சையையே பயனாகக்கொண்ட தவத்தை நீங்கள் என் செய்கிறீர்கள்? நீங்கள் ஸ்நானம் பண்ணும்பொழுது சில பூச்சிகள் ஜடையில் பற்றிக் கொள்ளுகின்றன; நீங்கள் உபயோகிக்கும் விறகுகளில் சில பூச்சிகள் வசிக்கின்றன. நீங்கள் தீவளர்த்துத் தவஞ் செய்யும்போது, அவைகள் உங்கள் கண்களுக் கெதிரிலேயே நெருப்பில் வீழ்ந்து சாவதைப் பாருங்கள்! 'பஞ்சாக்கினி' மத்தியிலிருந்து தவஞ்செய்வது தக்க தன்று; பிராணிகளின் நாசத்திற்குக் காரணமாயிருப்பதால், அது பிறவிக்கே காரணமாகும். எதைச் செய்வதில் பிராணிகளுக்குச் சிறிதும் துன்ப முண்டாவதில்லையோ, அதுதான் தவமாகும். அத்தவமும் கிருஷி வியாபாரம் முதலியவற்றை விடுதலாகிய 'ஆரம்ப' நிவிருத்தியில் ஏற்படும். கிருஷி முத

லியவை ஹிம்ஸையின்றி இரா. துறவிகளுக்குத்தான் கிருஷி முத லியவற்றை விடுதலாகிய 'ஆரம்ப'த்தின் நிவிருத்தி ஏற்படும். யாவற் றையும் துறந்திருத்தலே தவமாகும். மற்றதெல்லாம் பிறவிக்கே காரணமாகும். மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களுக்குச் சரீரமும் தள்ளத் தக்கதே. இராகம் முதலியவற்றாலேற்படும் பிறவியானது இராகாதிகளால் ஒழிவதில்லை. உதிரத்தினால் மாசாகின்ற வஸ் திரத்தை உதிரத்தா லொழிக்கலாமோ? தத்துவஞான மற்றவர் களுக்குத் துறவும் வீணேயாகும். அரிசியில்லாமல் பாத்திரம் முத லியவற்றால் அன்னம் சமைக்க வியலுமோ? ஜீவன் முதலியோரின் தத்துவத்தைத் தீர்மானிப்பதே தத்துவஞான மெனப்படும். இவ் வுலகில் மாறுதலான புத்திகொள்வதே மித்திபா ஞானமாம். 1 ஆப் தன், ஆகமம், பதார்த்தங்கள் இவற்றின் தத்துவத்தையறிவதே ஸம் மியக் ஞான மாம். இம்மூன்றிலும் ஆசை கொள்வது ஸம்மியக் தரி சனம். இவ்விரண்டையும் ஆத்மாவிடம் நழுவாமல் தரித்துக்கொண் டிருப்பது ஸம்மியக் சாரித்திர மெனப்படும். இம்மூன்றுமேமோக்ஷ த்திற்கு மார்க்கமாகும். 2. பாஹ்ய மான தவமெல்லாம் இம்மூன் றிற்கும் சாதனமாம். பாஹ்பதவ மில்லாமல் 3. ஆந்தர மான தவம் ஸித்திக்காது. தீயில்லாமல் 4. தண்டுலம் பக்குவ மாகுமோ? மித்தியா தரிசனம், மித்தியா ஞானம், மித்தியா சாரித்ரம் இவைகள் மோக்ஷத்தைக்கொடா. கருடனென்றெண்ணிக் கொக்கைத்தியானி த்தால் அது விஷத்தைப் போக்குமோ? ஸகல தோஷங்களுமற்றதும் ஸர்வஞ்ஞனால் முதலில் அறியப்பட்டதுமான தவத்தைச் செய்யுங் கள். இராகம் முதலிய குற்றமுள்ளவன் பிராணிகளைக் கரையேற்ற மாட்டான். தாமே கிணற்றில் விழுவோர் பிறருக்குக் கைகொடுக்க வியலுமோ?" என்று போதித்தான் 'ஜீவகன்'.

---

1. ஆப்தன் = ஜினதேவன்; ஆகமம் = சாஸ்திரம்; பதார்த்தங்கள் = ஜீவன், அஜீவன், ஆஸ்ரவம், பந்தம், ஸம்வரம், நிர்ஜாரம், மோக்ஷம் எனப் பதார்த்தங்கள் எழு வகையாம்.

2. அநசனம் (உண்ணாமை), ஊனோதயம் (அற்பமாக வுண்ணல்), விருத்தி பரி சங்கியை, இரசத்தியாகம் (தித்திப்பு முதலிய சுவைகளைத்தள்ளல்), விவிக்த சய்யாசனம் (தனியே சயனித்தல்), காயக்கிலேசம் (உடலைவாட்டுதல்) என பாஹ்யதவம் அறுவகையாம்.

3. பிராயச்சித்தம், விநயம், வியாவிருத்தி, ஸ்வாத்யாயம், உத்ஸர்க்கம், தியானம் என்று ஆந்தரதவம் அறுவகையாம்.

4. தண்டுலம் = அரிசி.

இதைக்கேட்ட தவசிகள் "ஜீவகன் சொன்னதே சரி" யென்று அங்கீகரித்து அதன்படி நடக்கலாயினர். தவசிகள் தருமத்தை ஏற்றுக்கொண்டதைக் கண்ட ஜீவகன் பெரிதும் மகிழ்ந்தான். உலகில் நல்லோர் தம்மைக் காட்டிலும் பிறருடைய க்ஷேமத்தையே விரும்புவார்களன்றோ? அப்பால் ஜீவகன் அங்கிருந்து அகன்று, "தக்ஷிண" தேசத்திலுள்ள "ஸஹஸ்ரகூட" த்திற்குச் சென்று ஆங்கு ஓர் "ஜிநாலயம்" கதவு சாத்தியிருப்பதைக் கண்டு, ஈசனைத் துதிக்கலானன்:—

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

என்றான். இவ்விதம் ஜீவகன் துதித்ததால் ஆலயத்தின் கதவு தானகவே திறந்துகொண்டது. பிறரால் செய்யவொண்ணத காரியத்தைச் செய்த ஜீவகன் வியப்படைய வில்லை. உலகம் முழுவதையும் பிரகாசிக்கச் செய்யும் சூரியன் தன் செயலைக்கண்டு ஆச்சரியமடைகிறதில்லை யன்றோ? அப்பொழுது ஒரு புருஷன் சந்தோஷத்துடன் ஜீவகனருகே வந்து நமஸ்கரித்து நின்றான். தன் விருப்பம் நிறைவேறினல் எவனும் மகிழ்வானன்றோ? ஜீவகனே அப்புருஷனைப் பார்த்து "ஆர்ய! நீ யார்? இங்குவந்த காரணம் யாது?" என்று வினவினன். அதற்கு அப்புருஷன் பின் வருமாறு பதிலுரைத்தான்:—"ஐயா! இங்கே "க்ஷேமபுரி" என்றொரு நகர மிருக்கின்றது. அதனில் "நரபதிதேவன்" என்ற அரசன் செங்கோல் செலுத்தி வருகின்றான்; அந்நகரில் "சுபத்திரன்" என்றொரு வணிகன் இருக்கின்றன். அவனுக்கு 'நிர்விருதி' என்றொரு மனைவியுண்டு. அவர்களுக்கு "கேமசரி" என்றொரு பெண் பிறந்தாள். அவள் பிறந்த தினத்திலேயே ஜோதிஷர்கள் "இந்த ஜிநாலயத்தின் கதவு எவன் வந்தவுடன் திறக்கின்றதோ, அவனே இவளுக்குக் கணவனுவான்" என்று தெரிவித்தார்கள். இப்பரீக்ஷைக்காக 'குணபத்திர' னென்ற ஏவலாளாகிய நான் எஜமானனுடைய கட்டளைப்படி இங்கே காத்திருந்து தங்களைக்கண்டுகொண்டேன். இனி எனக்குச் செல்ல விடை தரவேண்டும்" என்றான். அவ்வாறு சொல்லி, மீண்டும் வணங்கி விட்டுத் தன் தலைவனிடஞ்சென்று மிகுந்த மகிழ்ச்சியுடன்

ஜீவகனுடைய வரவையும் 'ஜிநாலயம்' திறக்கப்பட்டதையும் தெரிவித்தான்.

இம்மங்கள வார்த்தையைக் கேட்டதும் "சுபத்திரன்" ஜிநாலயத்துக்கு வந்து, பூஜைசெய்து கொண்டிருந்த ஜீவகனைக் கண்டான். அவன் பார்த்தவுடனேயே "ஜீவகன் இராஜகுமார" னென்றறிந்து கொண்டான். செங்கழுநீர்ப்பூவின் மணம் சொல்லித்தான் தெரிய வேண்டுமோ? பூஜை முடிந்தவுடன் 'சுபத்திரன்' ஜீவகனைப் பார்த்து "ஐய! ஜோதிஷர் சொற்படி என்புதல்வி நிமித்தம் இங்கே என் ஏவலாளை வைத்திருந்தேன்; தெய்வா தீனமாகத் தாங்கள் என் புத்திரிக்கு உரியவராய் விட்டீர்கள்; ஆதலால் தாங்கள் என் வீட்டுக்கு வந்து, என் பெண்ணை மணந்துகொண்டு, எங்களையும் கௌரவிக்க வேண்டும்" என்று சொன்னான். ஜீவகனும் சுபத்திரனுடைய நிர்ப்பந்தத்துக் கிணங்கி, அவன் வீட்டுக்குச் சென்றான். நல்லோர்களுக்கு நட்பானது எழுபதங்கள் பேசுவதனாலேயே ஏற்பட்டு விடுகிறது. "வலுவிலே வந்த இலட்சுமியைக் காலாலே உதைத்துத் தள்ளுபவனும் உண்டோ?" ஜீவகன் சுபத்திரன் வேண்டுகோளுக் கிணங்கிக் கன்னிகையை மணக்க இசைந்தான். பின்னர் சுப முகூர்த்தத்தில் 'சுபத்திரன்' தன் புதல்வியாகிய 'க்ஷேமசரி' யைத்தாரை வார்த்துக் கொடுக்கவே, பவித்திர குமாரனாகிய "ஜீவகன்" அவளை விதிப்படி ஏற்றுக் கொண்டான். பிறகு 'ஜீவகன்' 'க்ஷேமசரி' யுடன் அங்கேயே சிலகாலம் வசித்தான். ஒரு நாளிரவில் அவன் முன்பு "பதுமை" யைவிட்டுப் பிரிந்ததுபோலவே அவளிடமும் யாதொன்றும் சொல்லாமல் அந்தக் 'க்ஷேமசரி'யையும் விட்டுப்பிரிந்து வெளியே சென்றான். காலையில் எழுந்தவுடன் 'க்ஷேமசரி' கணவனைக் காணாமல் பெரிதும் வருந்தினாள். பெண்களுக்குப் புருஷனே பிராணனல்லவா? இவ்விஷயத்தை யறிந்த 'சுபத்திர' னும் மிகவருந்திக் கானகஞ்சென்று 'ஜீவக'னைத் தேடிப்பார்த்தான். எங்கும் அலைந்து பார்த்தும் 'ஜீவகன்' காணப்படவில்லை. பிறகு அவன் மிக்க வருத்தத்துடன் வீட்டுக்கு வந்து ஒருவாறு தானே சமாதான மடைந்து 'க்ஷேமசரி' யையும் தேற்றினான். அவளும் ஒருவாறு சமாதானமடைந்தாள்.

(ஆறுவது க்ஷேமசரியாரிலம்பகம் முடிந்தது.)

(கனகமாலையா ரிலம்பகம்.)

அப்பால் "ஜீவகன்" தன்னிடமிருந்த உயர்ந்த ஆபரணத்தை ஓர் தர்மிஷ்டனுக்குக் கொடுக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டே கானகத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு புருஷன் அவனுக்கு எதிரே வந்தான். உடனே ஜீவகன் அவனைப்பார்த்து, "ஐயா! நீர் எங்கிருந்து எங்கே போகிறீர்? க்ஷேமமாயிருக்கிறீரா?" என்று வினவ, அவன் "ஆர்ய! நான் காரிய நிமித்தம் இங்குமங்கும் அலைகின்றேன்; உம்மைப் பார்த்ததால், எனக்கு எக்காரியத்திலும் க்ஷேமம் அதிகமாயுண்டாகும்" என்றான். உடனே ஜீவகன் அவனைப் பார்த்துப் பின்வருமாறு போதிக்கலானான்:—

"அன்ப! க்ஷேமமானது கிருஷி முதலியவற்றால் உண்டாவதில்லை. 1. அறுவகைக் கருமங்களால் உண்டாகும் க்ஷேமம் ஆசைக்குக் காரணமாகவும், அழிவுள்ளதாகவும், தீவினைக்கு ஏதுவாகவும், துக்கத்தோடு கூடியதாகவும், தீய முடிவுள்ளதாயும் இருக்கின்றது. மோக்ஷத்தினாலேற்படும் சுகமானது, ஆத்மாவில் உண்டானதாயும், ஆத்மாவினால் அடையத் தக்கதாயும், இடையூறற்றதாயும், மிக்க உயர்ந்ததாயும், அழிவற்றதாயும், திருஷ்ணைபற்றதாயும் இருக்கின்றது. அவ்வானந்தமும் 'ஸம்யக் தரிசனக்ஞான சாரித்ரங்கள்' பூர்ணமாயிருந்தால்தான் ஏற்படும். 'ஆத்மா அனந்த ஞானமுள்ளது; அநந்த தரிசனமுள்ளது; அநந்த ஸௌக்கியமுள்ளது' என்று அறிவாயாக; மனைவி மக்களையும் சரீரத்தையும் ஆத்ம பின்னமென்றறி; அஞ்ஞானத்தினால் அனாதியான பிறவி ஏற்படுகின்றது. நீ பரோபகாரத்தைச் செய். கிருகஸ்தர்களாயிருந்தாலும் பரோபகாரஞ் செய்பவர்கள் துறவிகளேயாவர்; அவர்கள் சகலமான தீவினைகளினின்றும் விடுபட்டவர்களாவர். துறவிகளுடைய தருமங்களை மேற்கொள்ளுவது அசாத்தியமானது. ஆதலால், இப்பொழுது நீ கிருகஸ்த தருமங்களை ஏற்றுக்கொள். மாளிகையில் படிப்படியாகத்தான் ஏறவேண்டும். ஐந்து 2. அணு விருதங்களோடும், நான்கு சிக்ஷா விருதங்களோடும், மூன்று குண விருதங்களோடும் கூடிய

---

1. அஸி, மஸி, கிருஷி, வியாபாரம், வித்தை, சில்பம் எனக்கருமங்கள் அறுவகையாம்.

2. அஹிம்ஸை, ஸத்யம், கள்ளாமை, பிரம்மசரியம், பரிமித பரிக்ரகம் என அணு விருதங்கள் ஐந்தாம்.

கிருகஸ்தர்கள் ஸம்யக்ஞான தரிசன ஸம்பன்னர்களாவர். அஹிம்ஸை, ஸத்யம், கள்ளாமை, கலவாமை, கவறாமை, கள்ளுண்ணாமை, புலான் மறுத்தல், மதுவுண்ணாமை ஆகிய எட்டும் மூல குணங்களாம். 3. திக்விருதம், அனர்த்ததண்ட விருதம், போகோப போக பரிமாணவிருதம், என்னும் மூன்றும் குணவிருதமாம். ப்ரோஷதோப வாஸம், ஸாமாயிகம், தேசாவகாசிகம், வையாவிருத்யம், என சிக்ஷா விருதம் நால்வகையாகும். அணுவிருத முள்ளவன் ஒருசமயம் ஒரே க்ஷணத்தில் 'மகாவிருத' முள்ளவனாக ஆவன்; ஆதலால், நீ கிருகஸ்த தருமங்களை ஏற்றுக்கொள்'' என்று உபதேசித்தான்.

அப்புருஷனும் ஜீவகனுடைய உபதேசத்தை ஏற்றுக் கொண்டான். பிறகு ஜீவகன் தன்னிடமிருந்த உயர்ந்த நகையை அப்புருஷனுக்குத் தானமாகக் கொடுத்தான். உடனே அவன் விலைபற்ற

---

3. திக்விருதம், அனர்த்ததண்ட விருதம், போகோபபோக பரிமாண விருதம், ப்ரோஷதோபவாசம், ஸாமாயிகம், தேசாவகாசிகம், வையா விருத்யம் இவற்றின் இலக்ஷணங்கள் பின்வருமாறு:—தான் குறிப்பிட்ட திக்குகளிலுள்ள எந்த வஸ்துவையும் உபயோகிப்ப தில்லையென்றும், அந்தத் திக்குகளிலுள்ள மனிதர் சம்பந்தத்தை வைத்துக்கொள்வ தில்லையென்றும் பிரதிக்ஞை செய்து கொள்வது திக்விரதமாம். பிரயோஜனமின்றித் தண்டனைக் குட்படச்செய்யும் பாபங்களினின்றும் நீங்குதல் அனர்த்ததண்ட விரதமாம். வலை, ஆயுதம், உரல், உலக்கை முதலியவற்றைச் செய்து கொடுப்பதும், கோழி, பூனை, குதிரை, கிளி முதலியவற்றைப் பிடித்து வளர்ப்பதும், தைலம், வெல்லம் முதலியவற்றைச் செய்தற்குரிய யந்திரங்களை விருத்திசெய்வதும், தேன், அரக்கு இவைகளை விற்பதும், வாபி, கூபம், தடாகம் முதலியவற்றை வற்றச்செய்வதும், பூமியை உழுவதும், பிராணிகளுக்கு உணவளிக்காததும், தாங்கவொண்ணுச் சுமையைப் பிராணிகள் தாங்கச்செய்வதும், இன்னோரன்ன பிறவும் பிரயோஜனமின்றிப் பாபத்தைக் கொடுக்கக் கூடியவைகள். அத்தகைய அனர்த்த தண்டத்திலிருந்து நீங்கியிருக்கவேண்டும். ஆகாரம், புஷ்பம் முதலிய போக வஸ்துக்களையும், வண்டி, வாகனம், ஸ்திரீ முதலிய உபபோக வஸ்துக்களையும் ஒரு அளவிற்கு உட்படுத்துதல் போகோப போக பரிமாண விருதமாம்.

நான்கு கஷாயங்களையும், ஐந்து இந்திரிய விஷயங்களையும், நால்வகை ஆகாரங்களையும் நீக்கியிருப்பதே ப்ரோஷதோப வாஸமாகும். ஸந்தியா காலங்களில் கிருகஸ்தர்களால் (செய்யப்படும்) தருமத்தியானமே ஸாமாயிகமாகும். தானிருக்கும் தேசம் தவிர வேறு எந்தத் தேசத்தினுடையவும் இதரதேச வஸ்துக்களுடையவும் சம்பந்தத்தை வைத்துக்கொள்வ தில்லையென்றும், இதர தேசங்களுக்குச் செல்வதில்லையென்றும் விரதம் பண்ணிக்கொள்ளுவது தேசாவகாசிகமாகும். ஸத்பாத்திரங்களுக்கு ஆஹாரம், அபயம், ஔஷதம், சாஸ்திரம் என்னும் நான்குவித தானத்தைச் செய்வது வையாவிருத்யமாகும்.

20446

நகை கிடைத்ததாலும் தருமோபதேசம் பெற்றதாலும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். பின்பு அவன் ஜீவகனை வணங்கி அவனிடம் விடை பெற்றுச் சென்றான். ஜீவகனும் அவனை யனுப்பியபின் களைப்பினால் ஆரண்யத்திலேயே ஒருவனாக அமர்ந்திருந்தான்.

அப்பொழுது அங்கே ஜீவகன் செவியில் ஓர் இனிய சப்தம் கேட்டது. உடனே அவன் "இது மன்மதனது வில்நாணின் ஒலியோ? அல்லது வண்டுகளின் தொனியோ? இன்றேல், அன்னங்களின் சப்தமோ? அல்லது குயிலின் நாதமோ?" என்று சங்கித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஓர் அங்கனை தனியாகவே அவனுக்கு எதிரில்வந்து நின்றாள். ஜீவகன் அவளைக் கண்டதும் "பரஸ்திரீயைப் பார்க்கலாகாது" என்றெண்ணி முகத்தைத் திருப்பிக் கொண்டான். அந்நங்கை ஜீவகனைக் கண்டதும் அவனிடம் காதல் கொண்டாள். பெண்களுக்குப் பெரும்பாலும் கிட்டாத பொருளிடமே விருப்ப மேற்படும். ஜீவகன் உபாயங்களால் "அப்பெண் காமத்தால் தன்னருகே வந்திருக்கிறாள்" என்பதை யுணர்ந்து ஒழிவை யடைந்தான். புதிய பொருள்களெல்லாம் மூடரை மயக்கும். அறிஞரை மயக்காது.

21044

பின்பு ஜீவகன் "இவ்வுடலைவிட்டு உயிர் நீங்கினால், இவ்வுடலில் தோல், தசை, நரம்பு, எலும்பு, மலம் இவைகளே எஞ்சி நிற்கின்றன; ஆதலால், அருவருக்கத் தக்க இம்மல பிண்டத்தில் மூடன் மோக மடைகின்றான். ஆராய்ந்து நோக்கினால், இவ்வுடலில் துர்க்கந்தமுள்ள மலம், மாம்ஸம் முதலியவற்றினும் வேறு பொருள் இல்லை. இதில் ஆத்மா மோகமடையக் காரணம் யாது? இம்மாது பகுத்தறி வின்மையால் என் சரீரம் புஷ்டியாயிருப்பதைக் கண்டு மோகித்தனள்; இனி நான் இங்கிருப்பது தகாது. நாரியர் நெருப்புத் தணலுக்கு நிகராவர்; நரர்கள் நவநீதத்திற்கு ஒப்பாவர். ஆதலால் மாதர் சகவாசத்தால் மானிடருடைய மனம் உருகும். பாபத்தில் பயந்தவன் தாய், தங்கை, பெண் முதலியவர்களுடன் தனியே பேசுவதும் சிரிப்பதும் உட்காருவதும் கூடா." என்று தீர்மானித்து, அங்கிருந்து வெளியே செல்ல எத்தனித்தான்.

காதல்கொண்ட காரிகை அறிஞனான ஜீவகன் தன்னிடம் வெறுப்புக் கொண்டிருப்பதை அறிந்துகொண்டாள். அங்கனைகள் இயற்கையிலேயே இங்கிதத்தை அறியக் கூடியவர்களன்றோ? பிறகு அவ்வணங்கு ஜீவகனை வசப்படுத்துவதற்காக அவனைப் பார்த்து,

"மஹாபுருஷா! நான் ஒரு வித்தியாதர கன்னிகை; மிகவும் கஷ்டமடைந்திருக்கிறேன்; என் மைத்துனன் என்னை இங்கே பலாத்காரமாக அழைத்துவந்து மனைவியிடம் பயத்தினால் விட்டு விட்டான். எனக்கு "அனங்கதிலகம்" என்று பெயர். நீர் அடைக்கலம் புகுந்தவரைக் காப்பவராதலால் நான் உம்மைச் சரணமடைந்தேன்; நீர் என்னைக் காத்தல் வேண்டும்" என்று சொன்னாள். அப்பொழுது "காதலி! நீ எங்கே போய்விட்டாய்? என் உயிர் போகின்றதே!" என்று கதறினசத்தம் ஜீவகன் செவிகளில் புகுந்தது. உடனே இந்நங்கையும் நிமிஷநேரத்தில் எவ்விதமாகவோ மறைந்துவிட்டாள். மாதர்களின் மனத்தொழிலானது இயற்கையிலேயே மாயாவிகாரமல்லவா?

பின்பு ஒருவன் கதறிக்கொண்டே ஜீவகனிடம் வந்து அவனை நோக்கி, "ஹே! மகாபுருஷா! நானும் என் மனைவியும் இவ்வனத்திற்கு வந்தோம். அப்பொழுது என் மனைவிக்குத் தாகம் அதிகரித்தது. அதனால், நான் பதிவிருதையான அவளை இங்கே இருக்கும்படி சொல்லிவிட்டுத் தண்ணீர் கொண்டுவருவதற்காக வெளியே போனேன்; பிறகு தண்ணீருடன் திரும்பிவந்து பார்க்கையில், அவளைக் காணவில்லை. வித்யாதரர்களுக் குரிய வித்தையும் என் காதலி போனவுடன் போய்விட்டது; நான் இப்பொழுது என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை; அறிவாளியாகிய நீரே இனிச் செய்யத்தக்கதை அறிவிக்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

இதைக்கேட்ட 'ஜீவகன்' அவ்வித்யாதரனைப் பார்த்து:— "ஹே! பவதத்தனே! நீ வித்தையைக் கற்றிருந்தும் வீணே வருந்துகின்றாய்; வித்தையினால் அடையத்தகாத அழகியபொருள் ஒன்றுமேயில்லை; ஹே வித்யாதரா! துன்பம் வந்தகாலத்தில் வருந்தினால் அறிவாளிக்கும் அறிவீனனுக்கும் பேதமேது? பலவித புத்திகளுள்ள பெண்களுக்குள் பதிவிருதையார்? கற்புடைமை யென்பது காரிகைகளுக்குக் கதியில்லாவிடின், எங்கேனும் இருக்கும். அங்கனைகள் மதம், மாத்ஸரியம், பொறாமை, கபடம், காமம், கோபம், அஸத்யம், அசுசி, வக்ரம், பேதமை இவற்றுடன் கூடியவர்கள். கருணையும், ஆதரவும், அன்பும், கட்டுப்பாடும் அற்றவர்களும், தீவினைக்குக் காரணமானவர்களுமான ஸ்திரீகளிடம் உனக்கு ஆசை எதற்கு? ஆதலால், நீ மனைவியைப் பிரிந்ததற்காக வருந்தவேண்டாம்" என்று உபதேசித்தான். இதனைக் கேட்ட வித்யாதரன் சிறி

தும் சமாதான மடையவில்லை. நாயின் வயிற்றில் நெய் தங்குமோ? அவன் மீண்டும் மனைவியைக் குறித்துப் புலம்பிக்கொண்டே யிருந்தான்.

பின்பு 'ஜீவகன்' வித்யாதரனுடைய அறியாமைக்கு இரங்கி விட்டு, அவ்வனத்தினின்றும் வெகு தூரஞ்சென்று ஏமமாபுரத்தை யணுகி, ஆங்கிருந்த ஓர் தோட்டத்திற்குள் சென்றான். மனமானது புதிய பொருள்களைக் காண்பதால் மகிழ்வுறு மன்றோ? அச் சோலையில் 'விஜயன்' என்ற இராஜ குமாரன், ஒரு மாமரத்தில் இனிய பழமொன்றைக் கண்டு அதை யுண்ணுவதற்காக அதன் மேல் ஓர் அம்பை எய்தான். அது குறிதவறியதால் அக்கனியை வீழ்த்தவில்லை. அதனால் அவன் வெட்கி நின்றான். அப்பொழுது ஜீவகன் அவனருகிற்சென்று வில்லைவாங்கி வளைத்து, அக்கனியின் மேல் ஓரம்பைத் தொடுத்து அது நிலத்தில் விழுமுன்பே அக்கனி யில் தைத்துநின்ற அம்போடு அதைப்பிடித்து அப்புருஷனிடம் கொடுத்தான். உடனே அப்புருஷன் அதிசயித்து, ஜீவகனைப் பார்த்து, "மகாபுருஷா! நான் கூறுவதைக் கேட்கவேண்டும். இதோ "ஹேமாபம்" என்ற 'மத்திம' தேசத்தின் நகர மிருக்கின்றது; 'திருடமித்திரன்' என்பவன் இந்நாட்டிற்கு இறைவன்; 'நளினை' என்பவள் அவனுக்குப் பட்டமகிஷி; அவர்களுக்கு 'ஸுமித்திரன்' முதலிய புதல்வர் ஐவர் இருக்கின்றனர். அவர்களுள் நானும் ஒருவன்; எனக்கு 'விஜயன்' என்று பெயர். நாங்கள் வயதிலேயே யன்றி, வித்தையில் முதிர்ந்தவர்களாக ஆகவில்லை; தாங்களோ வித்தைகளைக் கசடறக் கற்றிருக்கிறீர்கள்; ஆகலால் என்னோடு வந்து என் தந்தையைக் காணவேண்டும்; என் வேண்டுகோளை அங்கீகரிக்க வேண்டும்" என்று சொன்னான். அவ் வேண்டுகோளுக்கு ஜீவகனும் இசைந்தான்.

அப்பால் இருவரும் 'திருடமித்திர' னிடம் போய்ச் சேர்ந்தனர். 'விஜயன்' சோலையில் நடந்த விஷயத்தைத் தந்தைக்குத் தெரிவித்தான். உடனே திருடமித்திரன் ஜீவகனுக்கு மிகுந்த மரியாதை செய்தான். அரசன், ஜீவகனைப் பார்த்த மாத்திரத்திலேயே "இவன் சிறந்த வில்லாளி" எனத்தீர்மானித்தான். பிறகு மன்னவன் ஜீவகனை நோக்கி "நண்ப! எனக்கு ஐந்து மைந்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் வில்வித்தையைச் செவ்வையாகக் கற்கவில்லை; ஆதலால், நீர் அவர்களுக்கு வில்வித்தையைக் கற்பிக்க

வேண்டும்'' என்றான். ஜீவகன் சரியென்று ஒப்புக்கொண்டு அவர்களுக்குச் சகல கலைகளையும் கற்பித்தான். சில நாட்களில் அம்மைந்தர்கள் வித்தைகளைக் கற்றுவல்லவராய் விளங்கினார்கள். தன் புதல்வர்களின் வில் திறத்தை யறிந்தவேந்தன் ஜீவகனை மிகவும் மெச்சிக்கொண்டான். பிறகு அரசன் "பேருபகாரஞ்செய்த ஜீவகனுக்கு நான் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? என் புத்திரியாகிய 'கனகமாலை' யை இவனுக்குக் கொடுப்பேன்'' என்று தீர்மானித்து, ஜீவகனிடம் தன் கருத்தை வெளியிட்டான். ஜீவகனும் அதற்கு இசைந்தான். பிறகு அரசன் சுபமுகூர்த்தத்தில் தன் பெண்ணான 'கனகமாலை' யை ஜீவகனுக்கு அக்னிஸாக்ஷியாக விவாகஞ்செய்து கொடுத்தான். பிறகு ஜீவகன் சிலகாலம் அங்கேயே தங்கி யிருந்தான்.

(ஏழாவது கனகமாலையாரிலம்பகம் முடிந்தது)

By M. M. Narayanaswamy Aiyar,
Mudikandan, P. O.

தாய்மொழியை வளர்த்தல்.

[இஃது அகில இலங்கா தமிழ் மஹாஜனசபையின் ஆதரவில் யாழ்ப்பாணத்திலே (26-12-22) ல் நடைபெற்ற தமிழ் அபிவிருத்தி மகா சமாசத்தின் விருப்பப்படி அம்மகா நாட்டில் படித்தற்பொருட்டுக் கும்பகோணத்தை அடுத்த கல்லூர்க் கலைமகள் கல்விக்கழகத் தலைவரும், கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும் ஆகிய ப்ரும்மஸ்ரீ. வை-சா. வேங்கடராம ஐயர் அவர்களால் எழுதப்பெற்றது. ப-ர்]

வணக்கம்.

தண்டமிழென் றயுன் சரணந் தனைப்பற்றித்
தொண்டனியான் றேன்றுத் துணையாகக்—கொண்டனனால்
வந்தடியேற் குன்னை வளர்க்கும் வகையறியத்
தந்தருள்வாய் நின்சேந் தமிழ்.

முன்னை முனிவாருள் முத்தமிழை முற்றுமுணர்ந்
தென்னை இனத்தமைத்தோ னெம்பிரான்—பின்னைவாழ்
நாரா யணன்பதத்தை நாடி நயந்துரைப்பன்
பாரா யணிகன் பரிந்து.

முன்னுரை.

தண்டமிழ் மொழியைத் தம்முயர் மொழியாக்
கொண்டிவண் குழுமிய குணப்பெருங் குன்றனீர்!

அடியேன் முதற்கண் ஒன்றற்கும்பற்றாத அடியேற்கு இப்

பணியைக் கொடுத்தருளுமாறு திருவருள் பாலித்த ஆண்டவனுக்கும், அங்ஙனமே தந்துதவிய 'அகில இலங்கா தமிழ் மகாசனசபை' அங்கத்தினர்க்கும் வணக்கத்தோடும் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். ஆனல், ஆண்டவனுக்கும், அவனுடைய படைப்புக்களுக்கும் வழிவழித்தொழும்பு பூண்டொழுகும் உரிமையினையும் கடமையினையும் கொண்டுள்ள மக்கள் வகுப்பினருள் ஒருவனாகிய அடியேனல், இத்தகைய நன்றியினைச் செய்தார்க்கு உள்ளன்புடன் வணக்கத்தைச் செலுத்த இயலுமே அன்றிப் பதிலாக எதும் கைம்மாறு செய்ய இயலாது என்பது ஒருதலை. என்றுலும், பிறப்புரிமையின் பயனுக அடியேற்குக் கிடைத்த அப்பணியை, அடியேன் நுங்கள் ஆணையைச் சிரமேற்கொண்டு இயன்ற அளவு நிறைவேற்ற முயலுவதால் அதனையும் செய்தவனுகப் பார்க்கிறேன். 'குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த' நுங்கள் மையாம்.

தோடக்கம்.

இனி, இத்தலைத்தொடர் 'மொழி என்பது யாது? தாய்மொழி என்பதன் பொருள் என்னை? நமது தாய்மொழி யாது? அதன் தொன்மையும் மேன்மையும் எத்தகையன? வளர்த்தல் என்பது யாது? வளர்த்தற்குரியவர் யாவர்? எங்ஙனம் வளர்த்தல் வேண்டும்? என் வளர்த்தல் வேண்டும்? வளர்க்காவிடில் வரும் இழுக்கு என்னை? வளர்த்தலால் வரும் பயன் யாது?' என்ற பல பகுதிகளாக்கிக் கூறுவதால் ஒருவகையாக விரித்துரைக்கப்படலாம். ஆதலின், அடியேனும் அம்முறையிற் சிறிது கூறுவேன்.

மொழி.

இது, மக்களாவார்க்கு ஒருவர் கருத்தைப் பிறிதொருவர்க்குத் தெரிவிக்கத் துணைபுரிவது; அவர்களை விலங்கினத்தினின்றும் வேறுபடுத்தி உயர்த்துவது; சான்றோர் பலரும் அவ்வப்பொழுது ஆராய்ந்து அறிந்த பெறலரும் உண்மைக் கருத்துக்களைத் தாம் உணர்வது மாத்திரம் அன்றித் "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு—காமுறுவர் கற்றறிந்தார்" என்றபடி பிறர்க்கும் அறிவித்து அவரையும் பயன்படச்செய்யும் பெருமையினை ஒவ்வொருவருக்கும் தாவல்லது; செவிப்புலனும் அணுவாகிய ஒலி நுட்பங்களால் உண்டாவது; உலகினரால் மொழியப்படுவது.

தாய் மொழி.

உலகம் பலவேறுநாடுகளாக அமைந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் உள்ளக் கருத்துக்களை ஒருவரோடொருவர் அளவளாவிக் கலந்துகொள்ள வேண்டியதும் இன்றியமையாததொன்றும். ஆகலின், அம்முறையில் ஒவ்வொரு நாட்டினரும் தாம்தாம் நினைத்தவற்றையும், கண்டவற்றையும், அறிந்தவற்றையும் தத்தம் இயற்கைக்கும், அறிவுக்கும், நாகரிகத்திற்கும் ஏற்றவாறு ஒருவரோடொருவர் அளவளாவக் தக்கவகையில் தனித்தனி மொழிகளைப் படைத்துக் கொள்வாராயினர். அங்ஙனம் ஒவ்வொரு நாட்டினரும் படைத்துக்கொண்ட மொழியே அந்த அந்த நாட்டினர்க்குத் தாய்மொழியாவது. இதனை நாட்டுமொழி, நிலத்துமொழி என்றும்; தேசபாஷை என்றும் கூறுப. "நாம் குழவிப்பருவந் தொட்டுப் பயின்றுவந்தது; பாலோடு அருந்தி, சோறோடு அயின்று, துயிலோடு உறங்கியது; இன்பிலும், துன்பிலும், யாண்டும், என்றும் நம்மோடு பயில்வது" எனக் கூறிச் சிறப்பிப்பர் அறிஞர், வே. இராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள். "தாய்மார்கள் இயல்பாகப்பேசும் மொழிகளே தாய்மொழிகளாம்" என்ற கருத்துப்பட ஓர் இடத்தில் வரைந்தருளினர் மகாத்மா காந்தி அடிகளார்.

நமது தாய்மொழி.

நாம் என்ற சொல்லுக்குப் பொதுவாக 'உலகத்துத் தோன்றிய மக்களாகிய நாம்' என்ற பொருள் கூறப்படலாம். எனினும், இங்கு, அடியேன் இதற்குக் கொண்ட பொருள் 'தண்டமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களாகிய நாம்' என்பதேயாம். இதுபற்றித்தான் அடியேன் நுங்களை முதற்கண் 'தண்டமிழ் மொழியைத் தம்முயர் மொழியாக்-கொண்டிவண் குழுமிய குணப்பெருங் குன்றனீர்' என விளித்ததூஉம். இதுகொண்டே கடவுளருளால் நமக்கும் தாய்மொழியாக அமைந்துள்ளது "அனைத்துலகும் இன்பமுற எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழ் அணங்கு" என அறிஞர் சுந்தரம் பிள்ளை அவர்களாற் சிறப்பிக்கப் பெற்ற செந்தமிழ் மொழியாம் என்பதும் போதரும்.

தமிழ் மொழியின் தொன்மையும், மேன்மையும்.

செந்தமிழாம் தெய்வமணங்கமழும் நமது தாய்மொழியோ பலவாய அரிய கருத்துக்களையும் எளிய நடையில் எவர்க்கும் இனிது

விளங்கும்வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அன்றியும், அது, நமது பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களை மரபுநிலை திரியாது எவரையும் இனிது உணர்ந்துகொள்ளச் செய்யவல்லதும், பிறமொழிகளுக்கில்லாத சில சிறப்புக்களுடன் கூடியதும், நவிலுந்தோறும் புதுப்புதுக் கருத்துக்களைத் தோற்றுவிப்பதும் ஆகிய தொல்காப்பியம் முதலிய பலதிறப்பட்ட இலக்கண நூல்களையும்; இயற்கையில் வனப்பை இற்றெனத் தெரிவிக்கத்தக்கனவும், பண்டைப்புலவர்கள் அரசர்கள் வீரர்கள் வள்ளல்கள் முதலாயினோருடைய அரிய சரித்திரங்களை வரலாற்று முறையுடன் அறியத் துணைசெய்யக்கூடியனவும் ஆகிய நற்றிணை, பத்துப்பாட்டு முதலிய சங்கத்தொகை நூல்களையும்; விரிந்த பலவாய உயர்ந்த கருத்துக்களை மிகச்சுருங்கிய தொடர்மொழிகளால் எவர்க்கும் எளிதில் விளங்குமாறு எடுத்து இடித்து உரைக்கவல்லதும், படிக்குந்தோறும் இன்பமூட்டிப் பண்படுத்தி உலகினருக்குப் பயன்படுமாறு படிப்போரைப் பக்குவப்படுத்திவருவதும், வடமொழி அங்கிலம் முதலிய பல மொழியாளரும் மொழிபெயர்த்துக்கொள்ளும் பெருமையினைப் பெற்றதும், எம்மதத்தினரும் தம்மதத்தினது எனப் போற்றத்தக்க சமநோக்குள்ளதும் ஆகிய திருக்குறள்போன்ற பல நீதிநூல்களையும்; புதுப்புதுக்கற்பனைகள் நிறையப் பெற்ற சிந்தாமணி, இராமாவதாரம் போன்ற பல பெருங்காப்பியங்களையும்; உள்ளதை உள்ளவாறு கூறிக் கற்போரை இன்புறுத்தும் சிலப்பதிகாரம், தொண்டர் புராணம் போன்ற தனித்தமிழ்ச் சரிதநூல்களையும்; 'சிந்தைக்கினிய செவிக்கினிய' ஆகவும், 'வந்த இருவினைக்கு மாமருந்து' ஆகவும் உலகினாற் பெரிதும் போற்றப்படுவனவும், படிக்குந்தோறும் படிப்போரை உளங்கனிந்து நெக்குருகி மயிக்குச்செறிந்து ஆனந்தக்கண்ணீர் சொரியும்வண்ணம் செய்துவருவனவும், பத்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பெருக்கெடுத்து வெள்ளம்போல் ஓடுகின்றனவும் ஆகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரதிவ்யப்பிரபந்தம், திருவருட்பாப்போன்ற அருளிச்செயல்களாகிய அன்பும் அருளும் நிறைந்த பல துதிநூல்களையும்; இலக்கணங்களையும் காப்பியங்களையும் பிறவற்றையும் கற்றற்குத்துணையாமாறு பலவகைப்பட்ட அரிய முடிபுகளையும் கருத்துக்களையும் தம்மகத்துக்கொண்டு, எவர்க்கும் இளமையிலேயே அவையிற்றை வரலாற்றுமுறைப்படி எளிதிற் புகட்டவல்ல பெருமையினையுடைய சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு,

சொட்டுஞ்சுவையார் அட்டப்பிரபந்தம் போன்ற பல சிறுகாப்பியங்களையும்; தண்டமிழ் மூதாட்டியாம் ஔவைப்பிராட்டியாரின் பல திறப்பட்ட அருளிச்செயல்களையும்; பலவான ஞான நூல்களையும் மருத்து நூல்களையும்; சோதிட நூல்களையும்; பிறமொழிகளிலுள்ள அரியபெரிய கருத்துக்களைத் தன்பால் மொழிபெயர்த்துச் சேர்த்துக் கொள்ளத்தக்க சொல்லாற்றலினையும் பெற்றிருக்கின்றது. அன்றியும் அது, தன்னைத் தாய்மொழியாகக் கொண்ட ஓர் அரசரையும்; பல ஜமீந்தாரர்களையும்; பல மடாதிபதிகளையும்; பல நூறு பெரும் பொருளாளர்களையும்; சற்றேறக்குறைய இரு நூறுலட்சம் மக்களையும்; பல தர்மஸ்தாபனங்களையும்; பல கழகங்களையும்; பலஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களையும்; இரண்டு துரைத்தனங்களையும்; தினசரி, வாரம் மும்முறை, வாரம் இருமுறை, வாரம் ஒருமுறை, மாதம் மும்முறை, மாதம் இருமுறை, மாதம் ஒருமுறை ஆக வெளிவந்து மக்களது அறிவு ஆற்றல்களைப் பல துறைகளிலும் காலத்திற்கேற்றவாறு உயர்த்தி வருகின்ற பலபத்திரிகைகளையும்; பிறவற்றையும் பெற்றிருக்கின்றது. இம்மட்டோ அதன்பெருமை? அஃது இவ்வளவோடு நில்லாது வளர்வதற்கும் வளர்ப்பதற்கும் தகுதியர்கப் பெருமைபொருந்திய, உலக வழக்கிலுள்ள, பேச்சுவழக்கு மொழியாகவும் இருக்கின்றது. இங்கு, இதைப்பற்றிப் பன்னிப் பன்னிப் பலகூறலாம். எனினும், அடியேன் அங்ஙனம் கூறி உங்களது மேலான உயிரினுஞ் சிறந்த காலத்தைக் கொள்ளை கொள்ளத் துணியமாட்டேன். ஆதலின், இதனைப்பற்றிச் சில ஆண்டு (1920) களுக்கு முன்னர்த் திருச்சிராப்பள்ளியிலே நடைபெற்ற 'சென்னை மாகாணத்தின் இரண்டாவது தமிழ்ப்பண்டிதர் பெருங்கூட்டம்' தொடங்குங்கால் அதன் வரவேற்புக் கழகத்தலைவர், ஆண்டுக்குழுமிய புலவர் பலர்க்கும் நல்வாவு கூறுகையில் மொழிந்தவற்றுள் சிலவற்றைக் குறிக்கின்றேன். அதுவருமாறு:—

"நமது தமிழ்மொழியோ மக்களது காலக்கணக்கைக் கடந்ததொரு பழங்காலத்திலேயே ஒரு சீரடைந்து சிறப்புறுவதாயிற்று. பழமாண்புடையோர் எனப்படும் பாபிலோனியர், எகிப்தியர், யவனர் முதலாயினோரும் தொன்மையை நோக்கின் தமிழை வென்றவர்களல்லர். உலகந்தோன்றியது தொடங்கி நடுக்கின்றி நிலைத்திருப்பதாகக் கண்டவரையும் கேட்டவரையும் மலைக்கச்செய்வதும், ஈடும் எடுப்பும் அற்றுத் தனிப்புகழ் தனக்கே உரிமையாக உள்ளது என யாவராலும் ஒப்பவியந்து கூறப்படுவதும் ஆன பேரிமையர்

மலையும் தோன்றுதற்கு முன்னரே தான் தோன்றித் தனிச்செங் கோல் ஓச்சியது தமிழ்மொழி என்னின், இதன் பழமையை ஆராய வல்லார் யாவர்? இப்பொழுது நீர்ப்பரப்பாய்ப் பரந்துகிடக்கும் தென் ஞழி முழுதும் நிலப்பரப்பாய் விரிந்திருந்த ஞான்று அந்நிலப் பரப் பில் வழங்கிவந்தது நமது பழந்தமிழே ஆகும். அவ்வாறு பரந்து கிடந்த பெருநிலப் பகுதிதான் இவ்வுலகத்து முதல் முதல் தோன் றிய நிலப்பகுதியென்றும், அந் நிலப்பகுதியிலேதான் மக்கள் முதல் முதல் தோன்றினர்கள் என்றும், இப்பொழுதைய பழங்கலைப் புல வர்கள் பலரும் அறிவிக்கின்றமையால், ஆண்டு வழங்கிய நமது பழந் தமிழ் மொழியே கைக்குறியால் கருத்தை விளக்கிவந்த மக்களது நாவை உளத்திற்கிசைய இயக்கி ஒலிக்குறியாய் எழுந்த முதல் மொழி என்பது பெறப்படுகின்றது. இப்பொழுதைய மொழிகள் பலவற்றின் சொற்கள் தமிழ்ச்சொற்களுக்கு இயைந்தனவாயிருப் பதும், செவ்வையுறாத சில மொழிகளின் சொற்களும் அமைப்பும் (தமிழ்ச் சொற்களுக்கும், தமிழின் அமைப்புக்கும்) மிக நெருங்கிய தொடர்பைக் காண்பிப்பதும், தமிழ் ஒலிகள் இயற்கை ஒலிகளுக் கேற்ப அமைந்துள்ளதும், ஒரு பொருளைக் குறிக்கும் பல தமிழ்ச் சொற்கள் மக்களது அறிவு வளர்ச்சிக்கேற்ப ஒவ்வொருகாலத்தில் அவர்கள் கண்ட அப்பொருளினது ஒவ்வொரு தன்மையைத் தனித் தேனும் பலவற்றைக் கூட்டியேனும் குறிப்பிப்பதும் மொழி ஆராய் ச்சியாளர் யாவர்க்கும் இதனது (நமது தண்டமிழ் மொழியினது) பழமையையும் என்றும் அழியாப் புதுமையையும் பொதுமையை யும் விளக்கி (அன்னாரை) மகிழ்விப்ப ஆகும்'' இஃதொன்றே ஈண் டைக்கு இப்பகுதியை விளக்கப்போதியதாம்.

வளர்த்தல்.

வளர்த்தல் என்ற சொல்லோ இன்னும் வளரவேண்டிய தாழ்ந்த நிலைமையிலுள்ள ஒன்றனைக் குறித்துச் சொல்லப்படுவதாகும். இந் நிலையில் '' 'நிலம் கடலாகவும், கடல் மலையாகவும், கண்டபழமை வாய்ந்ததும்,' 'அயலாய் உள்ளவர்களுக்கும் பொருளை விளக்கக் கூடிய இயற்கை ஒலி' களைப் பெற்றிருப்பதும், வேறுபல சிறப்புக் களையுடையதும் ஆகிய நுமதுமொழி, என் ஐயரே, தாழ்ந்த நிலை மையை அடைதல்வேண்டும்?'' என்று ஒருசிலர் அடியேனைக் குறிப் பாக வினவலாம். அங்ஙனம் வினவப்படின் அடியேன் அவர்க்கு ''ஐயன்மீர், இத்தகைய பழமையும் மேன்மையும் வாய்ந்த ஒரு மொழி தனது இயற்கையான உயர்ந்த நிலைமையிலிருந்து தற்

பொழுது தாழ்ந்த நிலைமையிலிருப்பது வியப்பே! எனினும், அஃது உலகத்தியற்கை. அன்றியும், அது (நமது மொழி) சில நூற்றாண்டுகளாக-ஏன், பல நூற்றாண்டுகள் என்றே சொல்லப்படலாம்—கால வேறுபாட்டாலும், அரசுமாற்றம் முதலிய பல மாறுபாடுகளாலும் இத்தகைய நிலைமைக்கு வந்துளது. அதனால் அக்குறையை அடியேனால் நமது மொழியின்மேல் ஏற்றமுடியவில்லை. ஆனால், அஃது இத்துணைக்காலம் காப்பார் அற்று இருந்தும் இன்னும் உயிருள்ள, உலக வழக்கிலுள்ள, பேச்சு வழக்குமொழியாக இருப்பதே அதன் மிக உயரிய மேன்மையினை வலியுறுத்துவதாகும்" எனக்கூற முன் வருவேன். நிற்க, பிணத்துக்கு அலங்காரம் பண்ணுவதுபோல் எவரும் தமது பழையபெருமையைச் சொல்லிக் கொள்வதால் அன்னார்க்கு வாக்கூடிய நன்மை ஏதும் இன்று; அஃது அறிவுடையோரது பெரு நகைப்புக்கே இடனாகும்; அன்றியும், அது, மடியாளர் செய்கையுமாம். ஆதலின், நாம் நமது மொழியை எங்ஙனம் வளர்த்தல் வேண்டும் என்பதை ஆராய்ந்து இனிது பயன்பெறும்வரையில் அத்துறையில் இடைவிடாது ஊக்கத்துடன் முயலவேண்டுவதே நமது முதற்கடமையாகும். அதுபற்றியே நாம் இன்று இங்கே கூடியிருக்கின்றோம். ஆகவே, இனி அடியேன் அதனைப்பற்றிக் கூறுவது பொருத்தமானது. ஒருவர் ஒன்றனை வளர்க்க முன்வந்தால் அன்னார் முதலில் அதன் கண்ணுள்ள குறைபாட்டைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். குறை—இன்றியமையாமை. இம்முறையில் அடியேன் அடுத்தபடியாகக் கூறவேண்டியது நமது மொழியின் இன்றியமையாமைக்குத் தடையாக இருக்கும் குறைபாடுகளையே. அடியேன் முற்கூறியாங்குக் காலவேறுபாடு முதலியவற்றால் நமது தற்கால உலக வாழ்க்கைக்கு வேண்டுவன முன்னினும் பலவாகப் பெருகிவிட்டன. அவை 'இவை இவை' என்பதைத் தெரிந்துகொள்வதற்கும், அவற்றை அடைவதற்கும் துணைபுரிவனவாகப் பல கருத்துக்களையும், வழிகளையும் நாம் பிறமொழிகளிலுள்ள நூல்களால் அறிந்து கொள்ளவேண்டிய நிலைமையிலிருக்கின்றோம். நம்முடைய பண்டைச் சரிதங்களே இன்னும் நம்மால் வரன்முறையாக எழுதப்படவில்லை. இஃது ஒரு மறுக்கமுடியாத பெருங்குறையல்லவா? இங்கு எடுத்துக் காட்டாகத் "தமிழ் நாட்டுத் தெற்கெல்லையாகப் பண்டைச் சான்றோர் பலரும் குறித்துச் செல்லும் குமரிக்குத் தெற்கே நாற்பத்தொன்பது தமிழ் நாடுகள் இருந்தன என்று ஒருசாராரும், இருந்ததில்லையெனப் பிறிதொருசாராரும்

கூறுவனவற்றையும்; முச்சங்கங்கள் இருந்தன என்று ஒருசாராரும், அங்ஙனமன்று சங்கம் ஒன்றே விட்டுவிட்டுத் தொடர்ந்துவந்தது என்று பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; தமிழ்மொழி மாட்டுச் சிறப்பாகப் பயின்றுவரும் அகம், புறம் என்பன தனித் தமிழ் வழக்கேயன்றி ஆரியர் வழக்காகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பெரும் பேறுகளைப்பற்றிய வழக்கன்று என்று ஒரு சாராரும், அவ்வழக்குப் பற்றியவே என்று பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; இங்ஙனமே, திருக்குறள்போன்ற நீதி நூற்கள் அகம், புறம் என்ற தமிழ் வழக்குப்பற்றி எழுந்தன என்று ஒரு சாராரும், அறம், பொருள், இன்பம், வீடு என்ற ஆரியர் வழக்குப்பற்றி எழுந்தன என்று பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; இவைபோன்ற பிற பலவற்றையும் ஆராய்ந்து உண்மை காண வேண்டியது தண்டமிழ்ச்சரித வளர்ச்சிக்கு இன்றியமையாதது அல்லவா?" எனக்கூறலாம். சின்னாட்களாக ஆங்காங்குச் சிற்சில அறிஞர்கள் இத்துறையில் இறங்கி நாட்டிற்கும், மொழிக்கும் நன்மையைச் செய்து வருவது நம்மனோரால் பெரிதும் போற்றத் தக்கதே எனினும், நமது சிறார்களும் உலகியல்களை நன்கு எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்க வகையில் உலகநூல், உயிர்நூல், உடல்நூல், செல்வநூல், நிலநூல், ஒளிநூல், ஒலிநூல், வானநூல் அறிவுநூல் போன்ற பற்பல நூல்கள் பலப்பல மொழிகளினின்றும் நமது மொழியில் இன்னும் மொழி பெயர்க்கப் படவேண்டாமா? வடமொழியிலுள்ள 'சப்தகல்பத்ருமம்' 'வாசஸ்பத்யம்' போன்றனவும், அங்கிலத்திலுள்ள 'என்சைகிளோ பீடியா பிரிட்டானிகா' 'வெப்ஸ்டர்ஸ்' போன்றனவும் ஆகிய ஒரு பேரகராதி நமது தாய்மொழியாம் தண்டமிழ் மொழியில் இருக்கவேண்டியது இன்றியமையாததொன்றல்லவா? அடியேன் இந்த கருத்தைத் தற்காலம் நமது சென்னைச் சர்வகலாசாலையார் வெளியிட முயன்றுவரும் 'தமிழகராதி' யைப்பற்றிப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர்ப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளேன். தமிழ் மக்களது வரிப்பணத்தைக் கொண்டு ஓரிலக்கத்திற்கு மேற்பட்ட வெண்பொற் காசுகளைச் செலவிட்டு நமது சர்வகலாசாலையார் வெளியிடப்போகும் அப்பேரகராதி எவ்வளவுதூரம் தமிழ்மக்களுக்குப் பயன்படப் போகின்றது என்பது அது வெளிவந்ததன் பின்னர்த்தான் அறியலாகும்போலும்! ஆதலின், அடியேனும் அதைப்பற்றி ஏதும் இப்பொழுது கூறாது விடுகிறேன். அது, நம்மவர்க்கும், நமது மொழிக்கும் பெருந்துணை

செய்யவேண்டும் என்பதே அடியேனது தாழ்மையான வேண்டு கோள். நிற்க அங்கிலம்போன்ற பிறமொழிகளில் அவ்வம் மொழியாளர்கள், தத்தம் மொழியில் வல்லுநராயிருந்த ஷேக்ஸ்பியர் (இவர் வங்கதேசத்தறிஞர்களில் ஒருவர் எனச்சிலரால் கருதப்படுகின்றனர்) போன்ற மகாகவிகள் இயற்றிய நூல்களைப் புத்தகசாலைப் பதிப்பு என்றும், சாதாரணப்பதிப்பு என்றும் வெளியிட்டுப் பார்ப்போர்களுடைய கண்களைக்கவருமாறும், எவர்க்கும் எளிதிற் கிடைக்குமாறும் செய்கின்றார்களே. அத்தகைய நிலைமை நமது பண்டைச் சான்றோர்கள் இயற்றியருளிய தண்டமிழின் மேலாம் தரங்களாகிய பெறலரும் நூல்களுக்கு உண்டாதல் வேண்டாமா? உயர்ந்த கருத்துக்கள் நிறைந்தனவாய், எவரையும் எளிதில் அறிவுறுத்தத் தக்கனவாய், நாடோடியாகத் திரியும் பிச்சைக்காரர்களிடமே, தங்கி உருமாறி யிருப்பனவாய் உள்ள பலபாக்களும் பழமொழிகளும் தத்தம் முன்னை உருவங்களுடன் வெளிப்படுத்தப்படல் வேண்டாமா? அங்ஙனமே, இன்னும் நவநாகரிகம் தலைக்காட்டாத சிற்றூர்களிலுள்ள பெண்பாலர்களிடத்திலும் சிறார்களிடத்திலும் தங்கியிருக்கின்ற தாலாட்டு, விளையாட்டு முதலியனபோன்ற பாடல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டாமா? விவசாயத்தைப்பற்றியும் கைத்தொழிலைப்பற்றியும், வியாபாரத்தைப்பற்றியும் நமது மொழியில் எத்தனை நூல்கள் இருக்கின்றன? சிற்பம், கணிதம் போன்ற கலைகளிலே பெரிதும் கவனஞ்செலுத்த விரும்புவோருக்குத் துணைசெய்யத்தக்க நூல்கள் நமது மொழியில் இருக்கின்றனவா? அரசியலைப் பற்றிய நூல்கள் போதிய அளவு நமது மொழிக்கு வேண்டுவதின்று? இவற்றால் நமது மொழியை முன்னர்ப் புகழ்பவன்போற் காட்டிப் பின்னர்ப் பழிக்கவந்தவனாக அடியேனை நீங்கள் கருதிவிடலாகாது. முற்காட்டிய குறைகளைப் போக்கத்தக்கனவாக ஆங்காங்குச் சிற்சில நூல்கள் வெளிவந்தும், வந்துகொண்டும் இருப்பதை அடியேன் நன்றாய் அறிவேன். என்றாலும், அவை, நமது நாட்டின் பரப்பையும், நமது மொழியினைப் பேசுவோரது பெருக்கையும் நோக்கச் சிறிதும் போதாதன என்பதே அடியேனது கருத்து. இதுபற்றித்தான் அடியேன் அவற்றைக் குறை எனக்கூறியதும். ஆயினும், இக் குறையையும் அடியேனால் நமது மொழிமாட்டு ஏற்றமுடியவில்லை. எங்ஙனமெனில், எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும், எந்த மொழியிலும் காலத்திற்கேற்ற பல திறப்பட்ட புதுப்புதுக் கருத்துக்கள் அடங்கிய நூல்கள் தாமாகவே தோன்றின என்று யாண்

டும் கேட்கப்படவில்லை. அங்ஙனம் தோன்றவும் முடியாது. ஆனால், அவை, பல தக்க அறிஞர்களால் அவ்வப்பொழுது புதிது புதிதாக எழுதப்பெற்றே நாளடைவில் வளர்ந்து உயர்நிலையைப் பெற்று வருகின்றன என்க. இவற்றால், நமது மொழி பல துறைகளிலும் வளர்க்கப்படவேண்டிய நிலைமையிலேயே இருக்கின்றது என்பதும், வளர்த்தல இன்றியமையாததொன்றும் என்பதும் பெறப்படுகின்றன.

(இன்னும் வரும்)

ஓர் கதை.

மதுவால் வரும் தீமை.

எனதன்புள்ள சகோதரர்காள்!

ஓரூரில் கட்குடியனொருவனிருந்தனன். அவன் ஒரு தினம் தன்னூருக்கருகாண்மையிலுள்ள ஓர் மதுக்கடைக்குச் சென்று கள்ளருந்திவிட்டுத் திரும்புகையில், அக்கடைக்காரன் வைத்திருந்த ஓர் மூட்டையைத் தன்னுடைய போதை மயக்கத்தால், கையிலெடுத்துக்கொண்டு நெடுந்தூரம் வந்து விட்டான்.

இவன் வரும்வழியில், ஓர் இளம்பருவப் பெண் தன்னுடைய சிறு குழந்தையைக் கைக்கொண்டு இக்குடிகேடனுக்கெதிரில் வந்தாள். அவளைக்காணவே இவனுக்குக் கெட்டசித்தமுண்டாகி இவன் அம்மாதைக் கற்பழிக்க இச்சித்துக் கள்ளுண்ட மயக்கத்தால் தன் மனையாள், பிறன்மனையாளென்பதை யுணராமலும், இது பாவமாகிய காரியமென்பதைக் கருதாமலும், அம்மாதைத் தொடர்ந்து, கெட்ட வார்த்தைகளாட ஆரம்பித்தான். அங்ஙனம், அப்பெண் என் செய்வாள் பாபம்! சுற்றுமுற்றும் யாரேனும் துணைவருவார்களாவெனத் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். அங்கொருவரும் துணைவரவில்லை. அதனால் அவள் மதிமயங்கினாள்; "ஆஹா! நான் இன்று இக்குடி கேடனாகிய சண்டாள னிடத்தகப்பட்டு விட்டேனே! இவனோ? கட்குடியால் மதியறியாது வெறிகொண்டு நம் கற்பழிக்க முயல்கின்றானே!" என்றேங்கினள்.

அக்கட் குடியன் அவள்மீது சற்றும் இரங்காமல் வலுவந்தமாகவே, தனித்துவந்த அம்மாதைத் தொந்தரவுக் குள்ளாக்கினான். அப்போது, அவன்செய்த ஆர்பாடத்தால் அம்மாதின் குழந்தைவீறிட்டழ ஆரம்பித்தது. என்னே பரிதாபம்! அக்குழந்தை அங்ஙன

மழவே, அவ்வழுகுரலோசை யாருக்கேனுமெட்டி ஜனங்கள் வந்து தன் காரியத்தைக்கெடுத்து விடுவார்களென்று கருதி அஃதுஷ்டன் அக்குழந்தையைக் கொலைசெய்யக் கருதிப் பிடித்திழுத்தான். அவ் வமயம், அப்பெண் மிக்கதுயரத்துடன் கதறி, 'குழந்தையைக் கொல்ல வேண்டாம்' என்று கெஞ்சினுள். அங்ஙனம் அக்குடி யனுக்குப் பலவித பரிதாப வார்த்தைகளைக் கூறியும், கள் மயக்கத் தால் அவன் கேளாது அம்மாதையும் பயமுறுத்தி அக்குழந்தை யையும் கொலைபுரிந்து விட்டான். அந்தோ! இவனுக்கு என்ன மனம்! என்ன குணம்! இவனுக்கு இவ்வுலகத்தில் கீர்த்தியும், மறு மையில் சுவர்க்காதி போகங்களும் கிடைக்குமோ?.

அதன்மேல் இவன் அக்குழந்தை யிருப்பதால், தனது காரியத் திற்கு இடையூறுண்டாகுமென்று கருதி அச்சிசுவையும் வதை செய்வதையும், தன் கற்புக்கழிவு வரப்போவதையும் எண்ணி எல் லையில்லாத் துயரத்திலாழ்ந்து கதறுகின்ற அம்மாதைப் பலாத்கார மாகத் துன்பத்திற்குள்ளாக்கிக் கெடுத்துவிட்டுத் தன் ஊருக்கேகி ஞன். பின்னர் தனித்துவந்த அம்மாது ஆற்ருெணுத் துயரத்து டன், தான் போகுமிடத்திற்கு வழிக்கூடிச் சென்ருள். அவ்வழி யில் சில வழிப்போக்கர்கள் வந்தார்கள். அவர்கள் நன்னடையும், நற்குணமும், நல்லபிமானமும் பொருந்தி யுள்ளவர்களென அம் மாதின் மனதிற்குப் புலப்பட்டமையால் அவள் அவர்களிடம் தனக் குண்டான இடையூற்றைக் கூறினுள். அங்ஙனம் கூறவே, அவ் வழிப் போக்கர்கள் அம்மாதின் பரிதாப நிலைமைக்கு மிகப்பரித பித்து, 'அக்குடியன் எவ்வழியாகச் சென்ருன்' என அவளிடம் வினவி அவன் சென்ற மார்க்கத்தை யுணர்ந்து அம்மாதையும் அழைத்துக்கொண்டு அக்குடியன் போனவழியே போய் அவனு டைய ஊரில் அவனைக் கண்டுபிடித்து அவ்வூர் நியாயாதிபதியிடம் கொண்டுபோனுர்கள். நியாயாதிபதி அக்குடியனைச் சிறைப்படுத்தி "நீ இந்தத் துர்க்காரியங்களைச் செய்ததுண்டா?" வெனக்கேட்க, அக்குடியன், "யான் யாதொன்று மறியேன்" என்று தான் செய் துள்ள குற்றத்தை மறைத்துத் தண்டனைக்குத் தப்பிக்குப்பொருட் டுப் பொய்யையும் நவின்றனன்.

இங்கே இவ்வாறு விசாரணை நடந்துகொண் டிருக்கும்போது, இவன் முந்திக் கள் கடையில் மூட்டையைத் திருடிக்கொண்டு வந்தபின்னர் அக்கள்கடைக்காரன் தன் மூட்டையைக் காணுது

அக்கடைக்கு வந்தவர்கள்மேல் சந்தேகப்பட்டு விசாரித்துக் கடைசியாக இவன்மீதே ஐயமுற்று இவனைத் தேடிக்கொண்டுவந்து, இவன் நியாயாதிபதியிட மிருப்பதைக்கண்டு, "இக்குடியன் என் கடையில் வந்து குடித்துவிட்டுத் திரும்புகையில் என் கடையிலுள்ள ஓர் மூட்டையை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான்" என்று தன் குறையை முறையிட்டுக் கொண்டான். அப்போது, நியாயாதிபதி, "குடிமயக்கத்தால் அவன் கடையிலுள்ள மூட்டையை எடுத்துக் கொண்டுவந்ததும் தவிர, வரும்வழியில் இப்பெண்ணை வலியஇழுத்துக் கற்பழித்ததுமன்றி ஓர் குழந்தையையும் கொலை செய்து போட்டான். இவனை இனிச் சும்மாவிடப்படாது" என்று அவனை விலங்கில்மாட்டி அடித்து வருத்தி, அவனுடைய வாக்கினாலேயே உண்மையை வெளிப்படுத்தச்செய்து அவனுக்குத்தக்க தண்டனை விதித்தனர்.

அந்தோ! இவன் கள் அருந்தியபடியாலன்றோ! கொலை, களவு, கள், காமம், சூது (பொய்) என்னும் பஞ்சமா பாதகங்களுக்கும ஆளானான். சகோதரர்களே! கள்ளானது பஞ்சமாபாதகங்கட்கும் முதன்மையாக நின்று, மற்ற நான்கு பாதகங்களையும் செய்வித்துத் தானும் அவற்றுள் ஒன்றாகச்சேர்ந்து அறிவற்றமனிதரைப் பஞ்சமாபாதகங்களுக்கு ஆளாக்கி விடுகிறது. பஞ்சமா பாதகங்களைச் செய்பவன் இம்மையில் அடையவேண்டிய அனந்த வின்பங்களை அடைவனோ? அல்லது, மறுமையில் அடையவேண்டிய சுவர்க்காதி போகபாக்கியங்களையேனும் அடைவனோ? வாசகர்களே! மதுவுண்பவன் மேற்கூறிய இரண்டு பலன்களையுமடைய முடியாதென்பது திண்ணம்.

இஃதுணர்ந்தே நன்னெறியி லீடுபட்ட "மஹாத்மா காந்தி" அடிகளும் இக்கெட்ட பழக்கமாகிய போதை பானம் உதவாது என்றே "மதுவிலக்கு" என்ற உபதேசத்தைச் செய்தனர். அங்ஙனம் செய்தும், நம் நாட்டினர் பலர் அதைக் கவனியாது இருப்பது மிக விசனிக்கத்தக்கதே. இனியேனும் அத்தகையர், மதுவுண்ணுவதினின்றும் விலகி எல்லா நன்மைகளையு மடையுமாறு செய்ய இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றனன். ஓம் தத்ஸத்.

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை,
தமிழ் நாவலர்.

தருமோபதேசம்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-5, சஞ்சிகை-8, பக்கம்-179.)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தருமத்திற் கென்றுமுன்னே பெரியோர் சேர்த்துக்
கருணையுடன் வைத்தநிதி தன்னை வேறு
கருமத்திற் செலவிடவே கருத்துக் கொண்டு
கண்கலங்கு மேழையர்க்கொன் றீந்தி டாமல்
பெருமைக்கு வீண்வழியிற் செலவு செய்தால்
பெருமைகெட்டுப் பேரழிந்து போவ தோடு
இருமைக்கு மொருபயனுங் கிட்டி டாமல்
இழிவனைத்து மலைபோல்வந் தெய்து மிங்கே. (அரு)

விருந்துக்குப் பெரியோர்வந் தழைத்த காலை
வேறொன்றுஞ் சொல்லாமற் போக வேண்டும்
மருந்துக்கோர் பொருள்கேட்டால் தடைசொல் லாமல்
மனமொப்பிப் பிறர்க்கதனை யுதவ வேண்டும்
அருந்துதற்குப் பிறர்வந்து வெந்நீர் கேட்டால்
அல்லெனினும் பகலெனினும் அளிக்க வேண்டும்
இருந்துமொன்றை யிரப்போருக் குதவி டாதோர்
இருப்பதனாலொருபயனு மில்லை யிங்கே. (அசு)

எள்ளுண்டை வேண்டாமென் றியம்பி விட்டே
இரவிற்சென் றிடித்தவுரல் தன்னைச் சுற்றிக்
கள்ளமுடன் குனிந்துநக்கித் தீனா வென்று
கருதியுடன் மைத்துனனு முலக்கை கொண்டு
துள்ளிமுது கினிற்போடக் கத்தி வீழ்ந்த
சூதனைப்போல் பிறரொன்றைக் கொடுக்கும் போது
தள்ளிப்பின் மனத்தினுள்ளே விரும்பு வோர்கள்
தாங்கவொண்ணா வவமானந் தனைக்கொள் வாரே. (அஎ)

சேம்பையார்.